Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 1 | Issue: II | July 2023

# தொழில்வாய்ப்பிற்கான வெளிநாட்டு ஊழிய இடம்பெயர்வும் வாழ்க்கைத்தரமும்: அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவு குறித்த விசேட ஆய்வு

**AM Thameem[1] S Maheswaranathan[2]**

[1, 2] Department of Economics, Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka.
Correspondence: thameemadp@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கான ஊழியப்படை நகர்வானது உலகமயமாக்கலின் பிரதான ஒரு விடயம் காணப்படுகின்றது. ஊழிய நகர்வின் மூலமாக கிடைக்கப்பெறும் பணஅனுப்பீடுகள் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அன்னிய செலாவணி வருமானத்தினை ஈட்டித்தரும் ஒரு முக்கியமான மூலமாகவும், வேலையின்மையை குறைப்பதற்கான ஒரு வழியாகவும், வறுமையில் வாடும் குடும்பங்களை மேம்படுத்தவும் பெரும் பங்களிப்பு செய்கின்றது. ஊழியர்களது பண அனுப்பல்கள் வீட்டுத்துறையின் வருமானம் மற்றும் செலவீனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி வாழ்கைத்தரத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. மேலும் வெளிநாட்டுப் பணவனுப்பல்களானது சேமிப்பினை அதிகரிப்பதனூடாக உள்நாட்டில் முதலீடுகளை அதிகரித்து வேலைவாய்ப்புக்களை உருவாகியுள்ளமை ஆய்வாளர்களால் நிருபிக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியில் தொழில்வாய்ப்பிற்கான ஊழியர்களது வெளிநாட்டு இடம்பெயர்வு அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை மதிப்பீடு செய்யும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட இவ்ஆய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பிரதேசத்தில் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டவர்களது குடும்பங்களில் பணவனுப்பீடுகளை கையாளும் வீட்டுத்துறையினர்களை எழுமாற்று அடிப்படையில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு 2022 மார்ச் தொடக்கம் 2022 மே வரையான காலப்பகுதிகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், பெறப்பட்ட தரவுகள் விவரணப் புள்ளிவிபரவியல் முறையின் அடிப்படையில் விகிதாசாரப் பகுப்பாய்வு மற்றும் MS EXCEL கணணி மென்பொதியைக் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான சார்ந்த மாறியாக வாழ்க்கைத்தரம், சாரா மாறிகளாக வருமானம், சேமிப்பு, உணவு, கல்வி, மருத்துவம், முதலீடு மற்றும் வீட்டின் தன்மை என்பன எடுத்துக் கொள்ளப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஊழியர் இடப்பெயர்வானது வருமான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் சேமிப்பு, உணவிற்கான செலவீடுகள், சுகாதார செலவீடுகள், வீட்டுச் செலவுகள் மற்றும் வீட்டுத்துறையின் கல்வி செலவீடுகள் போன்ற மாறிகளில் நேர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளமை ஆய்வு முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**முதன்மைச்சொற்கள்:** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு, ஊழியர் இடப்பெயர்வு, ஊழியர் பணவனுப்பல்கள், வாழ்க்கைத்தரம்

## 1. அறிமுகம்

தொழில்வாய்ப்பு நோக்கில் மக்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்தல் வெளிநாட்டு ஊழிய இடப்பெயர்வாகக் காணப்படுவதோடு இது உலகமயமாக்களின் ஒரு பிரதான விடயமாகயும் அமைகின்றது.வெளிநாடுகளில் தங்களது திறமைகளுக்கும் கேள்விக்குமேற்ப உயர்ந்த ஊதியங்கள் மற்றும் வாய்ப்புக்கள் கிடைப்பதனால் பெரும்பாலானோர் வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களில் இணைவதற்கு தூண்டப்படுகின்றார்கள்.

உலகளாவியரீதியில் 281 மில்லியன் மக்கள் வெளிநாட்டு இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர், இது உலக சனத்தொகையில் 3.6% வீதமாகும் (ILO, 2020). இதில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் காணப்படுவதாக மேலுள்ள ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றது. அதிலும் குறிப்பாக கிழக்காசிய, தெற்காசிய நாடுகளிலிருந்தான ஊழிய இடம்பெயர்வு அதிகமாகக் காணப்படுவதுடன் குறிப்பாக இலங்கையானது ஆசியாவிலேயே வெளிநாடுகளுக்கு ஊழியர்களை நிரம்பல் செய்வதில் பிரபல்யம் வாய்ந்த நாடாகவும் காணப்படுகின்றது. Makhlouf and mughal, (2011) என்பவர்களது ஆய்வு முடிவின் படி ஊழிய இடப்பெயர்வின் மூலமான பணவனுப்பல்களானவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வறுமையை குறைப்பிற்கு உதவுவதோடு, சேமிப்பு மற்றும் முதலீட்டை அதிகரிக்கச்செய்து அதனோடு இணைந்த வகையில் நுகர்வை அதிகப்படுத்தி மீண்டும் அதிக முதலீட்டை மேம்படுத்துகின்றது.

ஊழிய பண அனுப்பீடுகள் கல்வி மற்றும் சுகாதாரம் மூலமாக கிராமப்புற வறுமையை குறைத்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பிரதான பங்காற்றுகின்ற அதேவேளை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றது. உலக நிதி நெருக்கடியின் போது வெளிநாட்டு நிதிகள் குறைவடைவதனால் வீட்டுத்துறையின் நுகர்வு மற்றும் முதலீட்டு மட்டங்களை அதிகரிப்பதினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் துணைபுரிகின்றது.

ஆய்வுப் பிரதேசமானது 28 கிராமசேவகர் பிரிவுகளையும் 15,089 குடும்பங்களைச் சேர்ந்த 48,311 நபர்களையும் கொண்டிருப்பதோடு இப்பிரதேச மக்கள் தங்களது பிரதான வாழ்வாதார தொழில்களாக விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில்கள் என்பவற்றுடன் கால்நடை வளர்ப்பு, வர்த்தகம், அரச தொழில்கள் மற்றும் சுயதொழில்கள் என்பவற்றிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதேநேரம் குறிப்பிட்ட ஒரு தொகையினர் வருடாவருடம் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகவும் நகர்வடைகின்றனர். தற்போது 2,324 பேர் வெளிநாட்டில் தொழில் புரிகின்றனர் (அக்கரைப்பற்று பிரதேசசெயலகம், 2021). தொழில்வாய்ப்பிற்காக வெளிநாட்டிற்கு ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள 2,324 பேர்களில் தொழில்முறை நிலையிலுள்ள (Professional Level) மற்றும் தேர்ச்சிபெற்ற (skilled) ஊழியர்கள் 602 ஆகும், இவர்கள் மாதாந்த வருமானமாக இலங்கை ரூபா 150,000 முதல் 15 இலட்சம் வரை பெறுகின்றனர். அதேவேளை திறமையற்ற மற்றும் சாதாரண திறமை கொண்ட ஊழியர்களே அதிகமான தொகையினராக (1,722 பேர்) காணப்படுகின்றனர், திறமையற்ற மற்றும் சாதாரண திறமை கொண்ட ஊழியர்கள் மாதாந்த வருமானமாக

ரூபா 45,000/- முதல் 100,000/- வரை பெறுகின்றனர் (Resource Profile- 2021,அக்கரைப்பற்று பிரதேச செயலகம்.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பினால் கிடைக்கப்பெறும் அனுப்பீடுகளால் மக்களின் வறுமை குறைவடைந்து வாழ்க்கைத்தரம் உயர்வடைந்துள்ளதாக, Tajikistan, வடஎதியோப்பியா, ஸிம்பாவே அல்பேனியா, வியட்நாம், ரோமானியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

Tajikistan, இல் Khuseynova (2013) என்பவரால் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையின் வாழ்க்கை முறை மற்றும் சமூக, பொருளாதாரம் என்பவற்றின் மீது ஊழிய இடப்பெயர்வின் தாக்கத்தைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட விபரணரீதியான ஆய்வில், ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையின் சுகாதாரமற்றும் போசாக்கு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோடு கொள்வனவு சக்தியும் அதிகரித்துள்ளது என்ற முடிவுகள் பெறப்பட்டன. இருப்பினும் நீண்ட காலத்தில் ஊழிய இடப்பெயர்வானது வீட்டுத்துறையின் மீது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பது ஆய்வு முடிவாக பெறப்பட்டுள்ளது. அதாவது ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டவரின் வீட்டுத்துறையினர் அதிகமாக ஊழிய பண அனுப்பீடுகளிலேயே தங்கியிருப்பதோடு விபத்து, நோய், உயிரிழப்பு, வேலையிழப்பு போன்ற பாதகமான அபாயங்களுக்கு உள்ளாகக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. மேலும் குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வேலை செய்வதனால் பெண்கள் வீட்டை முகாமை செய்வதிலும், பிள்ளைகளைக் கணவன் இல்லாமல் தனியாக வளர்ப்பதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்க்கொள்கின்றனர் போன்ற முடிவுகள் இவ்வாய்வின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு தொழில்வாய்ப்பின் மூலம் பல்வேறு நேர்க்கணிய விளைவுகளை பல நாடுகள் அனுபவித்து வருகின்ற போதிலும் எதிர்க்கணிய விளைவுகளும் ஏற்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பானது மக்களின் வறுமையை குறைவடையச் செய்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் என்பது ஆய்வுகள் மூலம் நிருபிக்கப்பட்டிருப்பினும். அக்கரைப்பற்று பிரதேசத்தில் தொழில்வாய்ப்புக்காக வெளிநாட்டிற்கு சென்றவர்களின் எண்ணிக்கை 2019 இல் 1820 ஆக காணப்பட்டு 2021 இல் 2324 பேராக அதிகரித்துள்ள போதிலும் இப்பிரதேசத்தில் வறுமை நிலை மற்றும் சமுர்த்தி உதவி பெறுபவர்களின் எண்ணிக்கையில் சாதகமான மாற்றம் எவையும் இடம்பெறாத நிலையே காணப்படுகின்றது (Resource Profile – 2021, அக்கரைப்பற்று செயலகம்). அதாவது 2018 இல் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 3932 சமூர்த்தி பயனாளிக் குடும்பங்கள் காணப்பட்ட அதேநேரம் 2019 இல் 4333 குடும்பங்களும், 2021 இல் 4195 குடும்பங்களும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களாக காணப்பட்டதுடன் மேலும், 3432 குடும்பங்கள் இவ்வுதவியை பெறுவதற்கான காத்திருப்பு பட்டியலில் காணப்படுகின்றனர் (Resource Profile - 2021, அக்கரைப்பற்று பிரதேச செயலகம்).

ஊழியர்களது வெளிநாட்டு பண அனுப்பல்கள் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாக முதல் நிலை தரவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நுண்பாக (Micro Level) ஆய்வுகள் அம்பாறை மாவட்டம் மற்றும் அக்கரைப்பற்று

பிரதேச செயலகப்பிரிவுகளில் குறைவாகவே காணப்படுகன்றது. ஆகவே இவ்வாய்வானது அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான ஊழியர்களது இடப்பெயர்வு வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதோடு பிரதான நோக்கம் மற்றும் துணை நோக்கங்கள் பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பிரதான நோக்கம்**

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் தொழில்வாய்ப்பிற்கான ஊழியர்களது வெளிநாட்டு இடப்பெயர்வு அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

**துணை நோக்கங்கள்**

- தொழிலாளர் இடப்பெயர்வை மேற்கொண்டிருப்பதற்கான காரணங்களை மதிப்பீடு செய்தல்.
- ஊழிய பணவனுப்பீடுகளை வீட்டுத் துறையினர் எவ்வகையான தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதனைக் மதிப்பீடு செய்தல்.
- ஊழிய இடப்பெயர்வால் வீட்டுத்துறையில் ஏற்படும் சமூக பொருளாதார விளைவுகளை மதிப்பீடு செயதல்.

## 2. இலக்கிய மீளாய்வு

ஊழிய பண அனுப்பீடுகள் வீட்டுத்துறையின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் Cuong and Daniel (2012) என்போர்களால் வியட்நாமில் 2006 - 2008 காலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளிநாட்டு பண அனுப்பல்களில் அதிகமானவற்றை வீடு, காணி, முன்னர் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துதல், சேமிப்பு என்பவற்றுக்காகவே பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் நிலையான பொருட்கள் மீதான செலவீடுகள் குறைந்தளவாகவே காணப்பட்டதுடன் நுகர்வு, உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அவை பயன்படுத்தப்படவில்லை எனவும் கண்டறிந்துள்ளனர்.

வெளிநாட்டு ஊழிய பண அனுப்பல்கள் வீட்டுத்துறையின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதைக் கண்டறியும் நோக்கில் அல்பேனியாவின் 2002 - 2012 வரையான தரவுகளைப் பயன்படுத்தி Borici and Gavoci (2015)ஆகியோரால் Probit மாதிரியுருவை பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஊழிய பண அனுப்பல்களானது வாழ்க்கைத் தரத்தின் மீது நேர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பதும் ஆய்வு முடிவாக பெறப்பட்டுள்ளது.

வட எதியோப்பியாவின் Tehuledere Woreda பகுதியில் காணப்படும் வறிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் ஊழிய பண அனுப்பீடுகளின் தாக்கத்தைக் கண்டறியும் நோக்கில் Mohammed and Tolossa (2016) ஆகியோரால்

மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள குடும்பங்கள் ஊழிய பண அனுப்பீடுகள் மூலம் நன்மையடைவதோடு, ஊழிய பண அனுப்பீடுகள் நுகர்வு, வீடமைப்பு மற்றும் பராமரிப்பு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், ஊழிய பண அனுப்பீடுகள் சமூக, பொருளாதார விளைவுகளுடன் நேர்க்கணியத் தொடர்பைக் கொண்டுள்ளது என்ற முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

அல்பேனியாவில் Castaldo and Reilly (2007) ஆகியோரால் ஊழிய பண அனுப்பீடுகள் வீட்டுத்துறையின் நுகர்வில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைக் கண்டறிவதை நோக்காகக்கொண்டு சாதாரண இழிவு வர்க்க முறை, விவரணப் பகுப்பாய்வு முறை என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் ஊழிய பணஅனுப்பல்களை வீட்டுத்துறையினர் முக்கியமாக 4 வகையான தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர். அவை உணவு, உணவல்லாத பொருட்கள், நெடுவாழ்வுப் பொருட்கள் மற்றும் பயன்கள் (Utilities) என்பனவாகும். ஊழிய பண அனுப்பீடுகள் உணவல்லாத பொருட்கள் தவிர்ந்த ஏனைய 3 வகையான தேவைகளுடனும் புள்ளிவிபர ரீதியாக பொருளுள்ள வகையில் நேர்கணிய தொடர்பைக் கொண்டுள்ளது என்ற முடிவானது பெறப்பட்டுள்ளது.


அளவு சார் மற்றும் பண்பு சார் ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி Nzima et al. (2016) என்பவர்களால் ஊழிய பண அனுப்பல்கள் ஸிம்பாவேயின் Tsholotsho மாநிலத்தின் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதைக் கண்டறிவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவாக, ஊழிய பண அனுப்பல்கள் வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கும் காரணியாக உள்ளது என கண்டறிந்துள்ளனர். மேலும் 19.5% மான குடும்பங்கள் சிறு வகையான தொழில் முயற்சிகளுக்கு முதலீடாக பயன்படுத்துகின்றனர் என்ற முடிவு கண்டறியப்பட்டுள்ளது.
Siriwardhana et al. (2015) ஆகியோர்களால் தொழிலுக்காக இடம்பெயர்ந்தவர்களின் குடும்பத்தின் மீது ஊழிய இடப்பெயர்வின் தாக்கத்தைக் கண்டறிவதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தாய், தந்தை இருவரும் வெளிநாட்டில் காணப்படும் போது குழந்தைகள் உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றமை, இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள குடும்பங்களில் சுகாதார மற்றும் குடும்ப நல திட்டங்கள் பாதிக்கப்படல், உளநல வீழ்ச்சி, தினசரி மன அழுத்தம் அதிகரிக்கின்றமை போன்ற எதிர்க்கணியத் தாக்கங்களை ஏற்படுத்திமை ஆய்வு முடிவுகளாக முன்வைத்துள்ளனர். மேலும், சிலர் ஊழிய பண அனுப்பீடுகளை முதலீட்டு பொருட்களின் மீதும் (வீடமைப்பு, வாகனம், தளபாடங்களை கொள்வனவு செய்தல்) சிலர் அன்றாட தேவைகளுக்காக செலவிட,சிறிய தொகையினர் எதிர்கால தேவைகளுக்காக சேமிப்பு செய்கின்றனர் எனும் முடிவும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

Gibson et al. (2011) என்பவர்களால் Tonga வில் 2005 - 2006 வரையான காலப்பகுதிகளில் ஊழிய இடப்பெயர்வானது வீட்டுத்துறை உறுப்பினர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறியும் நோக்கில் மேற்கொண்ட ஆய்வில் ஊழிய இடப்பெயர்வின் பின்னர் வீட்டுத்துறையின் தலா வருமானம் குறைவடைந்துள்ளதோடு,

ஊழியர்களை அனுப்பும் வீட்டுத் துறையினரிடம் குறைவான நீடித்த பொருட்கள் காணப்படுவதோடு கால்நடைகளும் குறைவாகவே காணப்படுகின்றன. மேலும் இவ்வீட்டுத்துறையினர் வங்கிச் சேவைகளுடன் குறைவான தொடர்பைக் கொண்டு காணப்படுகின்றனர் என்பதும் அவர்களால் பெறப்பட்ட ஆய்வு முடிவுகளாகக் காணப்படுகின்றது.

## 3. ஆய்வுமுறையியல்

ஆய்வுப்பிரதேசமான அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 28 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடு சென்ற 2324 நபர்களில் 131 நபர்கள்(Sample size Calculator - Calculator.net) எழுமாற்று மாதிரியடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. தொழில்வாய்ப்பிற்காக அதிகளவு வெளிநாடு சென்றுள்ள 14 கிராம சேகவர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு கிராம சேவக பிரிவிலிருந்தும் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள குடும்பங்களில் தொழிலாளர்களது பணவனுப்பீடுகளை கையாளும் குடும்ப உறுப்பினர்கள் எழுமாற்று அடிப்படையில் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாறு விகிதாசார மாதிரி எடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 131 குடும்ப உறுப்பினர்களுக்கும் வினாக்கொத்துக்களை வழங்கி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான சார்ந்த மாறியாக வாழ்க்கைத்தரம், மற்றும் சாரா மாறிகளாக வருமானம், சேமிப்பு, உணவு, கல்வி, மருத்துவம், முதலீடு மற்றும் வீட்டின் தன்மை என்பன தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. ஆய்வுக்கான எண்ணக்கருவாக்கச் சட்டகம் உரு 1 ல் காட்டப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்விற்காக அளவுசார் தரவுகளும் (Quantitative Data) பண்புசார் தரவுகளும் (Qualitative Data) பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இவை முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலமாக முதலாம் நிலைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. நேர்காணல், மற்றும் அவதானிப்பு மூலமாகவும் ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டது.




**உரு 1 எண்ணக்கருவாக்கச் சட்டகம்**

மூலம்: ஆய்வு நோக்கத்திற்காக பல்வேறு இலக்கிய மீளாய்வுகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது.

## 4. ஆய்வுமுடிவுகளும் பரிந்துரைகளும்


குறிப்பட்ட ஒரு பிரதேசச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு வீட்டுத்துறையின் வாழ்க்கைத்தரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை கண்டறியும் நோக்கோடு இவ்வாய்வானது ஆய்வுப்பிரதேசத்திலுள்ள ஊழிய இடப் பெயர்வுக்குள்ளான வீட்டுத்துறையினரின் செயற்பாடானது விவரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முடிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மொத்த வருமானம், சேமிப்பு உணவிற்கான செலவீடுகள், சுகாதார செலவீடுகள், கல்வி மீதான செலவீடுகள் மற்றும் வீட்டுச்செலவுகள் என்பன வீட்டுத்துறையின் வாழ்க்கைத்தரத்தின் மீது நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை ஆய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றது.

**அட்டவணை 1 ஊழிய இடப்பெயர்வாளர்களின் தனிப்பட்ட தரவுகள்**

| மாறிகள் | வீதம் (%) |
|---|---|
| **பால்** | |
| ஆண் | 11 |
| பெண் | 89 |
| **திருமண நிலை** | |
| திருமணமானவரகள் | 67 |
| திருமணமாகாதவர்கள் | 33 |
| பிரிந்து வாழ்பர்கள் | 0 |
| கணவனை இழந்தவர் | 0 |
| **கல்வித் தகைமை** | |
| இடைநிலைக் (தரம் 06-10) கல்வி | 8 |
| சாதாரண கல்வி | 45 |
| உயர்கல்வி | 35 |
| தனியார் கல்வி நிறுவனங்களில் தொழில் கல்வி | 8 |
| பட்டப்படிப்பு | 4 |

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அட்டவணை 1 ஆனது ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்ட 89% மானவர்கள் ஆண்களாகவும் 11% மானவர்கள் பெண்களாகவும் காணப்படுவதுடன் 67% மானவர்கள் திருமணமானவர்களாவர்களாகவும் காணப்படுகின்றனர். கல்வித்தகைமை அடிப்படையில் ஊழிய இடப்பெயர்வாளர்களில் 8% மானவர்கள் இடைநிலைக் (தரம் 06-10)கல்வியையும், 45% மானவர்கள் சாதாரணதரக் கல்வியையும் 35% மானவர்கள் உயர்தரக் கல்வியையும் 8% மானவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் தொழில் கல்வியையும், 4% மானவர்கள் பட்டப் படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.


மேலும் ஊழியர்களது கல்வித்தர அடிப்படையில் இவர்களது தொழில் வாய்ப்புகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. உரு 2 ன் அடிப்படையில் 42.7% மானவர்கள் சாதாரண திறமை கொண்ட வேலைவாய்ப்புக்களில் பணியாற்றுவதுடன் தொழில்முறை நிலையில் 6.9% ஊழியர்களும், திறமையான தொழில்வாய்ப்புக்களில் 22.1% மானோரும் திறமையற்ற தொழில் வாய்ப்புகளில் 19.1% மானோரும் பணிபுரிகின்றனர்.




மூலம் கள ஆய்வு 2022

**உரு 2 ஊழிய இடம்பெயர்வாளர்களின் தொழில் வகை**

உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை, இலங்கையில் காணப்படும் திருப்தியற்ற வருமானம் என்பன ஊழிய இடப்பெயர்விற்கான பொதுவான காரணங்களாகக் கண்டறியப்பட்டதோடு இவ்விரு காரணங்களையும் கருத்திற் கொண்டு 41% மான ஊழியர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். இலங்கையில் தகுதி திறமை அடிப்படையில் வேலைவாய்ப்பு காணப்படாததன் காரணமாக 18% மானவர்கள் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர் (உரு 3). மேலும், எதிர்காலத்தில் இலங்கையில் புதிய தொழிலை ஆரம்பிப்பதற்கான பணத்தினை உழைத்தல் மற்றும் முன்னர் பெற்ற கடனைத் திருப்பிச்செலுத்தல் போன்ற காரணங்களிற்காகவும் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர் என்பது ஆய்வு முடிவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது.




மூலம் கள ஆய்வு 2022

**உரு 3 ஊழிய இடம்பெயர்விற்கான காரணங்கள்**


வீட்டுத்துறையினரால் பெறப்படும் பண அனுப்பல்களின் பெரும்பகுதி நுகர்வுப் பொருட்களின் மீதே செலவிடப்படுகின்றது. குறிப்பாக உணவுப் பொருட்களின் மீதான

செலவீடு 58% மாகவும், கல்விக்கான செலவீடுகள் 15% மாகவும் காணப்படுகின்றது. வீட்டுத்துறையினர் தமது பிள்ளைகளை அதிகளவில் தனியார் வகுப்புக்களில் இணைத்து கல்வித் தரத்தை மேம்படுத்த முயற்சிக்கின்றனர் என்பதையே இது வெளிப்படுத்துகின்றது. ஆய்வுப் பிரதேசமானது அதிகளவு நகரப்புறச் சூழலைக் கொண்டு காணப்படுவதால் மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக தனியார் மருத்துவ துறைகளை நாடுகின்றனர். இதனால் வீட்டுத்துறையினரின் மருத்துவத்திற்கான செலவீடுகள் 8% மாகவும் மின்சாரம், குடிநீர் போன்ற வீட்டு வசதிகளுக்காக 7% மான செலவீடுகளும் காணப்படுவதுடன் 12% மானவை சேமிப்பாகவும் காணப்படுகிறது.

ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள பெரும்பாலான வீட்டுத்துறையினரிடம் சேமிப்புப் பழக்கம் காணப்படுகின்றது. இவர்களில் 9% மானவர்கள் மாத்திரம் வெளிநாடு செல்வதற்கு முன்னர் ரூபா 10,000 க்கு மேற்பட்ட சேமிப்பு பழக்கத்தைக் கொண்டவர்களாக காணப்பட்டதுடன் வெளிநாடு சென்றதன் பின்னர் 33% மானவர்கள் ரூபா 10,000 க்கு மேற்பட்ட சேமிப்பு பழக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றனர். இவர்களில் 30% மான வீட்டுத்துறையினர் முதலீட்டு நடவடிக்கைகளினையும் மேற்கொள்கின்றனர். 67% மான வீட்டுத்துறையினர் பண அனுப்பீடுகளை மாத்திரமே வருமானமாக கொண்டிருப்பதால் அவர்கள் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனினும் 31% மானோருக்கு பண அனுப்பீடுகள் மேலதிக வருமானமாக காணப்படுகின்றது. அவ்வாறான வீட்டுத்துறையினர் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

பொதுவாக இவ்வீட்டுத்துறையின் வருமானம், சேமிப்பு, செலவீடுகள் அனைத்தும் உயர்வாகவே காணப்படுகின்றது. 67% மான வீட்டுத்துறையினர் பண அனுப்பீடுகளை மாத்திரம் வருமானமாக எதிர்பார்க்கின்ற போதும் அவர்களது வருமானம் அதேதொழிலிற்கு இலங்கையில் காணப்படும் வருமானத்தை விட உயர்வாகக் காணப்படுகின்றது. வருமானம் அதிகமாக காணப்படுவதன் காரணமாக ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையின் நுகர்வுப் பொருட்கள், கல்வி, மற்றும் மருத்துவம் போன்ற அனைத்தின் மீதான செலவீடுகளும் சேமிப்பும் உயர்வாகவே காணப்படுகின்றது.

வீட்டுத்துறையினர் பண அனுப்பல்களில் ஒரு தொகையினை குழந்தைகளின் கல்விக்காக செலவிடுகின்றனர். தமது குழந்தைகளை தனியார் பாடசாலைகளிலேயே சேர்க்க விரும்புகின்றனர். இதற்கான செலவீடுகள் அதிகமாகும். ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுள் குறிப்பிட்ட ஒரு வீட்டுத்துறையினை நோக்குமிடத்து, அவ்வீட்டுத்துறையில் வயது 10 மற்றும் வயது 14 கொண்ட இரு பிள்ளைகள் காணப்படுகின்றனர். இருவருமே தனியார் பாடசாலைகளில் கல்வியைத் தொடர்கின்ற அதேவேளை இருவரும் தனியார் வகுப்புகளையும் தொடர்கின்றனர். இதனால் கல்விக்கான செலவீடு, உயர்வடைந்துள்ளதுடன் பண அனுப்பீடுகளில் மூன்றில் ஒரு பகுதியினை கல்விக்காக செலவிடுவதாகவும் ஆய்வுக்குட்டுத்தப்பட்ட பயனாளியினால் குறிப்பிடப்பட்டது.




மூலம் கள ஆய்வு 2022

**உரு 4 வீட்டுத் துறையினரின் செலவீடுகள்**

அத்தோடு இப்பிரதேசம் அதிகளவு நகர்ப்புறச் சூழலைக் கொண்டு காணப்படுகின்றமையால் அனேகமானோர் தமது பிள்ளைகளை அதிக தூரமுள்ள பாடசாலைகளுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்காக அனுப்புகின்றனர். அதற்கான செலவீனங்களும் உயர்வாகவே காணப்படுகின்றது. மேலும், பாடசாலை கல்வியில் மாத்திரம் தங்கியிருக்காது தனியார் வகுப்புகளையும் தொடர்வதனால் கல்வியின் மீதான முதலீடானது 15% மாகக் காணப்படுகின்றது.

***மருத்துவம்***

ஆய்வுப் பிரதேசமானது நகரப்புறப் பிரதேசமாக காணப்படுவதால் பொதுத்துறை வைத்தியசாலைகளும் தனியார் துறை மருத்துவ அமைப்புகளும் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் பொது வைத்தியசாலைகளில் காத்திருந்து, சிரமப்பட்டு மருந்துகளைப் பெற்றுக் கொண்டவர்கள் ஊழிய பண அனுப்பீடுகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தனியார் மருத்துவ துறைகளையே நாடுகின்றனர். ஆய்வு முடிவுகளின் படி 55% மான வீட்டுத்துறையினர் தனியார் துறை மருத்துவ சேவைகளையும் 25% மானவர்கள் சிலவேளைகளில் பொதுத்துறை மருத்துவ சேவைகளையும் சில வேளைகளில் தனியார் துறை மருத்துவ சேவைகளையும் நாடுகின்றனர்.

ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறை ஒன்றுடனான கலந்துரையாடலில், குறித்த குடும்பத்தில் தாய், தந்தை இருவருமே நோயாளிகள் அவர்கள் தொடர்ச்சியாக மருந்து பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள் இதனால் மாதாந்தம் ஒரு நிலையான தொகையினை அவர்களது மருத்துவ செலவீடுகளுக்காக ஒதுக்குவதாக குறிப்பிட்டடார். அத்தோடு தனியார் மருத்துவ துறையில் சில வகையான மருந்துகள் மற்றும் பரிசோதனைகளிற்கு உயர்வான செலவீனங்கள் ஏற்படுகின்றன. எவ்வாறிருப்பினும் பண அனுப்பீடுகள் மூலம் குடும்ப உறுப்பினர்களின் சுகாதார நிலைமையினை மேம்படுத்தியுள்ளனர் என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டு வசதிகளுக்கான செலவீடுகளை நோக்குமிடத்து வீட்டுத்துறையில் அனைத்து வகையான மின்சார உபகரணங்களும் அதன் பாவனையும் அதிகமாகக் காணப்படுவதனால் மின்சாரக் கட்டணம் உயர்வாகக் காணப்படுவதோடு, தொலைபேசிக்கட்டணம், நீரக் கட்டணம், எரிபொருள் மற்றும் எரிவாயு போன்றவற்றிற்கான செலவீடுகளும் உயர்வாகக் காணப்படுகின்றது. அதேபோன்று வீட்டில் ஆடம்பரமான குளியலறை, சமயலறை, தளபாடங்கள், உயர்ரக திரைச்சீலைகள் மற்றும் உயர் வசதிகளைக் கொண்ட வீட்டினை வடிவமைத்தற்காக செலவீனங்களும் உயர்வாகக் காணப்படுகின்றது.

## *சேமிப்பு*

தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு சென்றுள்ள வீட்டுத்துறையினரில் 66% மானோரிடத்தில் சேமிப்புப் பழக்கம் காணப்படுகின்றது. அனுப்பீடுகளில் சராசரியாக 12% த்தினை அவர்கள் சேமிக்கின்றனர். எதிர்காலத்தில் நிரந்தரமான தொழில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கில் சேமிப்புப் பழக்கம் உயர்வாகக் காணப்படுகின்றது. சிறு பிள்ளைகளின் சேமிப்புக் கணக்கில் மாதாந்தம் சிறு தொகையினை சேமிக்கின்றனர். சிலர் பாதுகாப்பு நோக்கில் வங்கிகளில் சேமிக்கின்றனர். மேலும் சீட்டு முறையினையும் பணத்தினை சேமிப்பதற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

வருமான வேறுபாடானது சேமிப்பு வேறுபாட்டினைத் தோற்றுவிக்கின்றது. சேமிப்பானது எதிர்கால முதலீட்டுக்கான வழியாகவும் காணப்படுகின்றது. பல்வேறு நோக்கங்களின் அடிப்படையிலேயே வெளிநாடு சென்றுள்ளவர்கள் அதன் பயனை அடைவதை நோக்காகக் கொண்டே அதிகமாக சேமிக்கின்றனர். 31% மானோருக்கு பண அனுப்பீடுகள் மேலதிக வருமானமாகும் அவ்வாறான வீட்டுத்துறையினர் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

## *முதலீடு*

இங்கு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். குடும்பத்தில் உள்நாட்டில் வேலை செய்பவர்களும் வெளிநாட்டில் வேலை செய்பவர்களும் காணப்படும் போது அக்குடும்பத்தினர் ஊழிய பண அனுப்பீடுகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர். முச்சக்கர வண்டி, குடியிருப்புக் காணிகள், வயல் காணிகள், கடை அறைகள், சிறு கட்டிடத் தொகுதிகள் போன்றவற்றை கொள்வனவு செய்து அவற்றை வாடகைக்கு விடுவதன் மூலம் குறிப்பிட்டளவான பணத்தினையும் பெற்றுக் கொள்கின்றமை ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

ஆய்வின் போது ஒரு வீட்டுத்துறையினர் பண அனுப்பீட்டைக் கொண்டு தற்போது 30 பேர்ச்சஸ் நிலத்தினைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் விரைவிலேயே அவ்விடத்தல் கோழிப் பண்ணை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் இவ்வாய்வில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 4 பெண் ஊழிய இடப்பெயர்வாளர்களின் குடும்பங்களில் குறிப்பிட்ட ஒரு

குடும்பத்தில் அப் பெண்ணின் கணவர் ஊழிய பண அனுப்பீடுகள் மூலம் சிறியளவான கட்டிடம் ஒன்றைக் கொள்வனவு செய்து தற்போது சில்லறை வியாபாரம் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார். 7% மானவர்கள் வளவு (காணி) மற்றும் நகைகளை கொள்வனவு செய்து விற்பதன் மூலமும், துணி மற்றும் ஆடை வியாபாரம் மூலமும் வருவாயை உழைத்து வருகின்றனர். இன்னும் சிலர் எதிர்க்கால முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பணத்தினை சேமித்து வருகின்றனர்

### *மொத்த வருமானம்*

ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்ட வீட்டுத்துறையின் சராசரி மொத்த வருமானம் உயர்வாகக் காணப்படுகின்றது. ஒரே வகையான வேலைவாய்ப்புகளுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வித்தியமான கூலி வீதங்கள் வழங்கப்படுகின்றது. சில வகை தொழில்களுக்கு வெளிநாடுகளில் தொழிற் பாதுகாப்பு காணப்படுகின்றது. ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்துறையினில் ஒருவர் பின்வருமாறு தனது கருத்தை தெரிவித்திருந்ததார்.

"*தனது கணவர் வெளிநாட்டிற்கு தொழிலுக்காகச் செல்லுமுன் இலங்கையில் சாரதித் தொழிலினை மேற்கொண்டு மாதாந்தம் ரூபா 40,000 விடக் குறைவான வருமானத்தையே பெற்றிருந்தார்.வருமானம் மற்றும் தொழில் என்பவற்றில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டதன் காரணமாகவே ஊழிய இடப்பெயர்வை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தற்போது வெளிநாட்டில் அதே தொழிலினையே மேற்கொள்கின்றார். ஆனால் தற்போது மாதாந்தம் வருமானம் ரூபா 100,000 க்கும் அதிகமாக் கிடைக்கின்றது. மேலும் தொழிலில் நிச்சயத்தன்மையும் காணப்படுகின்றது*" எனக் குறிப்பிட்டார்.

வெளிநாட்டில் சாரதித் தொழிலினை மேற்கொள்ளும் 13% மான வீட்டுத்துறையினர் இவ்வாறான கருத்தையே கொண்டுள்ளனர். எல்லா வகையான தொழில்களிலும் வருமான வேறுபாடுள்ளது. இதன் காரணமாகவே ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையின் வருமானம் உயர்வாகக் காணப்படுகின்றது.

### *சமூக, பொருளாதார விளைவுகள்*

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட 85% மான குடும்பங்கள் தனிக் குடும்பங்களாகும். வெளிநாட்டு ஊழிய இடப்பெயர்வை மேற்கொள்ளும் முன்னர் இருந்த நிலைமையை விட ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டதன் பின்னர் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்துள்ளதாக கலந்துரையாடலின் போது 90% மான வீட்டுத்துறையினர் குறிப்பிட்டனர். வீட்டுத்துறையினர் ஆரோக்கியமான உணவு வகைகளை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்து பயன்படுத்துவதனால் பிள்ளைகள் சிறிய நோய்த்தாக்கங்களிலிருந்து விடுபட்டுள்ளனர். இவர்கள் அதிகளவில் ஆடம்பரப்பொருட்களை நுகரக்கூடியவர்களாவும் காணப்படுகின்றனர். இதனால் அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்வடைந்துள்ளது.

அக்கரைப்பற்று மேற்கு கிராமப் பகுதியில் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்ட நபர் ஒருவரின் குடும்பத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்ட போது அவர்கள் ஆரம்பத்தில் பொதுவான மலசலகூட வசதியினை உபயோகித்ததன் விளைவாக பல

சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களது பிள்ளை ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டதன் பின்னர் முதலில் தமக்கென தனியான மலசலகூட வசதியொன்றை அமைத்துக்கொண்டதாகவும் தற்போது அது மிகவும் பயனுள்ளதாக காணப்படுவதோடு பாதுகாப்பனதாகவும் காணப்படுவதாக குறிப்பிட்டார். இது வீட்டுத்துறையின் சுகாதாரத்தினை மேம்படுத்தியுள்ளது.

கல்வி நடவடிக்கையில் ஊழிய இடப்பெயர்வு ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாக வீட்டுத்துறை ஒன்றின் கருத்தை நோக்கின்,

*‘‘எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். மூவர் பாடசாலைக் கல்வியைத் தொடர்கின்றனர். முதலாவது பிள்ளை உயர்தரக்கல்வியை கற்றதன் பின்னர் தனியார் கல்வி நிறுவனம் மூலமாக அவர் மேலதிக கல்வியை தொடரவிரும்பினார். எனினும் எனது கணவர் அப்போது சாரதி தொழிலையே மேற்கொண்டார். அதில் வரும் வருமானம் சிறியளவாக காணப்படுவதோடு சில சமயங்களில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்திவிடுகின்றது. இதன் காரணமாக நால்வரது கல்வி நடவடிக்கைகளுக்கும் அதிகளவு செலவழிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதோடு முதலாவது பிள்ளையின் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், 2017ஆம் ஆண்டு என்னுடைய கணவர் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டார் இதன் மூலம் தற்போது போதியளவான வருமானம் கிடைப்பதோடு தற்போது முதலாவது பிள்ளை தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வியை தொடர்கின்றார்’’* எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறே 50% மான வீட்டுத்துறையினர் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டதன் பின்னர் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடிந்ததாக குறிப்பிட்டனர். எனவே ஊழிய இடப்பெயர்வானது வருமான உயர்விற்கு காரணமாக அமைவதோடு அது பல்வேறு துறைகளின் மீது நேர்க்கணிய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றமை அறியக்கூடியதாகவுள்ளது.

ஊழிய இடப்பெயர்வு ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு நேர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ள போதிலும் சில எதிர்க்கணிய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஊழிய இடப்பெயர்வுக்குள்ளான 67% மான வீட்டுத்துறையினர் அதிகளவில் ஊழிய பண அனுப்பீடுகளிலேயே தங்கியுள்ளமை கண்டறியப்பட்டது. பணிப் பெண்ணாக ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள ஒரு வீட்டுத்துறையில் குறித்த பெண்ணின் கணவர் மாதத்தில் குறைவான நாட்களே தொழிலுக்குச் செல்வதுடன் தனது மனைவியின் பண அனுப்பல்களையே தனது நாளாந்த செலவுக்காகவும் பயன்படுத்துகின்றார். ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட 67% மான ஊழிய இடப்பெயர்வாளர்கள் திருமணமானவர்களாவர். தனிக்குடும்பங்களாகவுள்ள இவர்களின் வீட்டுத்துறையினர் அதிகளவில் அல்லது முழுமையாக ஊழிய பண அனுப்பீடுகளில் மாத்திரமே தங்கியுள்ளனர். இது அவர்களின் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் மீதான ஆர்வத்தைக் குறைத்துள்ளது. அத்தோடு பண அனுப்பீடுகள் அதிகளவில் நுகர்வுப் பொருட்கள் மீதே செலவிடப்படுகின்றது.

கணவன் வெளிநாட்டில் காணப்படும் வீடுகளில், பெண்கள் மற்றும் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை பாதுகாப்பின்மையாகும். இவ்வாறன குடும்பங்களில் அநேகமான சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் பிரச்சினையை எதிர்நோக்கி வருவதாக 60% மானவர்கள் குறிப்பிட்டனர். திருமணமாகி பிள்ளைகள் காணப்படும் நிலையில் கணவன் ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையில் பெண்கள் பிள்ளைகளை தனியாக பராமரிப்பதில் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பிள்ளைகளை பாடசாலை மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கு அனுப்பும் போது சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பாதுகாப்பு கருதி பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் தாமும் கூடவே செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாக குறிப்பிட்டனர்.
மேலும், பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

*"எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் காணப்படுகின்றனர். அத்தோடு எனது கணவரின் தாயார் வயது முதிர்ந்தவராக காணப்படுவதோடு அவர் எங்களுடனேயே வசித்தும் வசிக்கிறார். அடிக்கடி அவரின் மருத்துவ நடவடிக்கைகளிற்காக வைத்தியசாலைக்கு செல்லவேண்டி ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்ல நேர்கின்றது. இது பாதுகாப்பான முறையாக காணப்படுவதில்லை. அவசர தேவைகளின் போது அருகில் யாரும் காணப்படாமை மற்றும் தனியாக வீட்டை பராமரிப்பது மிகவும் சிரமமாக காணப்படுகின்றது"* எனக் குறிப்பிட்டார்.

வயது முதிர்ந்த தங்கியிருப்போரைக் கொண்ட 26% மான குடும்பங்கள் இவ்வாறான பிரச்சினைகளைக் எதிர்நோக்குகின்றனர் என்பது வீட்டுத்துறையினருடனான கலந்துரையாடல் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தது.

பெண் இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையில் பிள்ளைகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கலந்துரையாடலின் போது ஒரு குடும்பத்தில் 19 வயதுடைய அவர்களது மூத்த பெண் பிள்ளையே வீட்டை பராமரித்து வருகின்றாள் குறித்த பெண்ணுக்கு ஒரு சகோதரி மற்றும் ஒரு சகோதரன் காணப்படுகின்றனர். இதனால் அப்பெண்ணே அவர்களுக்கு முழுப் பொறுப்புடையவளாக காணப்படுகிறாள். அவர்களது தந்தை அருகில் காணப்படுகின்ற போதும் தாய் அருகில் காணப்படாமையால் பல்வேறு விடயங்களையும் தந்தையிடம் கூற முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் கூறினர். மேலும் இங்கு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 50% த்திற்கும் மேற்பட்ட வீட்டுத்துறையில் சிறு பிள்ளைகள் தாய் அல்லது தந்தை அருகில் காணப்படாமையினால் அவர்களின் அன்பை இழந்தவர்களாக காணப்படுவதோடு மனத்தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் என்பதை கலந்துரையாடல் மூலம் அறியக்கூடியதாய் இருந்தது.

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட 4 பெண் இடப்பெயர்வாளர்களின் குடும்பங்களில், குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் கணவன் நகர்ப்புற உணவகம் ஒன்றில் வேலை செய்கிறார். அவர்களுக்கு 3 பிள்ளைகள் காணப்படுகின்றனர். அவர்களை அப்பெண்ணின் தாயாரே கவனித்து வருகின்றார். அவரும் வயதானவர். அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

*''பிள்ளைகள் மூவரும் சிறியவர்கள் என்னால் முன்பைப் போல் சுறுசுறுப்பாக இயங்க முடிவதில்லை எனது மகள் சொந்த வீடொன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கிலேயே வெளிநாடு சென்றுள்ளார். பிள்ளைகளை அவர்களது தாயைப்போன்று என்னால் பராமரிக்க முடியாதுவிடினும் என்னால் முடிந்த வரை அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருகிறேன். அவர்களது எதிர்காலமே எனக்கு முக்கியம் என்பதனால் பல சிரமங்களையும் பொறுத்துக்கொள்கிறேன்.''* எனக் கூறினார்.

இவ்வாறு பிள்ளைகளை வேறு ஒருவரின் பராமரிப்பில் விடுவதானது பலருக்கும் சிரமத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் குடும்பக் கட்டமைப்பு சீர்குலைந்து விடுவதுடன், எதிர்க்காலத்தில் குழந்தைகள் தமது பெற்றோரின் மீதான நம்பிக்கையை குறைத்துக் கொள்வதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

மேலும், பிள்ளைகள் இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையில் தாய், தந்தையினர் தமது பிள்ளைகளைப் பிரிந்திருப்பதில் அதிகளவு கவலை கொண்டுள்ளனர். சில முக்கிய நிகழ்வுகளின் போது கூட அவர்களால் கலந்துகொள்ள முடியாமையானது அதிகளவு கவலையை ஏற்படுத்துவதாக அவர்கள் கூறினர். எனினும் அவர்களது எதிர்கால சிறப்பான வாழ்க்கையை கருத்திற் கொண்டே ஊழிய இடப்பெயர்வை மேற்கொள்ள அனுமதித்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். எனவே வெளிநாட்டு ஊழிய இடப்பெயர்வானது குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு வகையான நேர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்துகின்ற அதேவேளை பல்வேறு எதிர்க்கணிய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் வெளிநாட்டு கலாசாரம் இப்பிரதேசத்தில் ஊடுருவியுள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நிதியியல்சார் கல்வியறிவு குறைவாக காணப்படின் மோசமான நிதி முகாமைத்துவத்திற்கு வழிவகுப்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகளை பணவனுப்பீடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாது. பண அனுப்பீடுகளை உற்பத்திசார் நோக்கங்ளுக்கு பயன்படுத்தாது விடுவதனால் வீட்டுத்துறையினரின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றங்களை பெறுவது கடினப்படுத்தப்படுகின்றது. பிள்ளைகளின் கல்வி அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காக அல்லாமல் சிலர் மது மற்றும் போதை பாவனைக்காகவும் பயன்படுத்தகின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் வெளிநாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்களாக சென்றுள்ள குடும்பங்களில் காணப்படுகின்றது.

## 5. முடிவுரை

குறிப்பட்ட ஒரு பிரதேச சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு வீட்டுத்துறையின் வாழ்க்கைத்தரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை கண்டறியும் நோக்கோடு இவ்வாய்வானது ஆய்வுப்பிரதேசத்திலுள்ள ஊழிய இடப் பெயர்வுக்குள்ளான வீட்டுத்துறையினரின் செயற்பாடானது விவரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முடிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மொத்த வருமானம், சேமிப்பு உணவிற்கான செலவீடுகள், சுகாதார செலவீடுகள், கல்வி மீதான செலவீடுகள மற்றும் வீட்டுச்செலவு

என்பன வீட்டுத்துறையின் வாழ்க்கைத்தரத்தின் மீது நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை ஆய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றது.

## 6. பரிந்துரை

வெளிநாட்டு ஊழிய இடப்பெயர்வானது குடும்பங்களின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்தியுள்ளமை ஆய்வு முடிவுகளால் உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் வீட்டுத்துறையினரது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கு ஊழிய இடப்பெயர்வுக்கான ஊக்குவிப்புக்களை வழங்கலாம். மேலும் ஊழிய இடப்பெயர்வினை வறுமையை குறைப்பதற்குறிய ஒரு கொள்கைக் கருவியாகவும் பயன்படுத்த முடியும்.

தொழில்வாய்ப்பிற்காக வெளிநாட்டுக்கு சென்றவர்களில் 42.7% மான ஊழியர்கள் சாதாரண திறமை கொண்ட வேலைவாய்ப்புகளிற்கே சென்றுள்ளனர். இவர்களது வருமானம் இலங்கையில் காணப்படும் வருமானத்தை விட உயர்வாகக் காணப்படுகின்ற போதும் திறமையான வேலைவாப்புக்களிற்கான வருமானத்தை விட குறைவாகும். உள்நாட்டில் பரம்பரையாக மற்றும் அனுபவ அறிவினை கொண்டு திறமையான வேலைகளில் ஈடுபடுவோர் முறையான சான்றிதழ்கள் இல்லாமையால் வெளிநாடுகளில் குறைந்த சம்பளத்தில் திறமையற்ற வேலைகளை மேற்கொள்கின்றனர். இவர்களை குறுகிய காலப்பகுதிக்குள் NVQ level சான்றிதழ்தாரிகளாக மாற்றி உயர் வருமானத்தை பெறச்செய்ய முடியும்.

ஊழியர்களை திறமையான வேலைவாய்ப்பு நோக்கில் இடம்பெயர்வதற்கு ஊக்குவிப்பதோடு திறமைகளை மேலும் வளர்பதற்குரிய வழி வகைகளையும் மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு அரசாங்கமானது ஊழிய இடப்பெயர்வாளர்களுக்கு இலவசமான தொழில் பயிற்சி நெறிகளையும் வழங்குதல் வேண்டும்.

ஊழிய இடப்பெயர்வை மேற்கொண்டுள்ள வீட்டுத்துறையினர் ஊழிய பண அனுப்பீடுகளில் அதிகமானவற்றை நுகர்வுப் பொருட்களின் மீதே செலவிடுகின்றனர். இது வீட்டுத்துறையின் ஆரோக்கியத்திற்கு உதவியாக காணப்பட்டாலும் உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீடாக மாற்றப்படுவதில்லை. வீட்டுத்துறையினரிடம் இலாபகரமான முறையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான அறிவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே ஊழிய பண அனுப்பீடுகளை உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகளின் மீது முதலிடுவதற்குரிய முதலீட்டு ஆலோசணைகளை வழங்குவது அவசியமாகும்.

கிராமிய பகுதியில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்குரிய வசதிகள் குறைவாகும். எனவே அரசாங்கமானது கிராமப்புற பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களுக்கு சுயதொழில் முயற்சிகளை இலகுவாக மேற்கொள்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
கணவன் வெளிநாடு சென்றுள்ள இடங்களில் மனைவிமார் வீடு மற்றும் பிள்ளைகளை பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன் பாதுகாப்புப்

பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். அவ்வாறனவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி வழிநடாத்துவதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.
கல்வியை இடைநிறுத்தியவர்களுக்கும், தொழிலற்ற இளைஞர் யுவதிகளுக்கும் VTA, NAITA மற்றும் தொழிநுட்ப கல்லூரிகள் போன்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களின் ஊடாக தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் திறன்களை வழங்குதன் ஊடாக தேர்ச்சி பெற்ற ஊழியர்களை உயர் வருமானம் பெறும் தொழில்களுக்காக அனுப்பலாம்.

சர்வதேச ஊழியச் சந்தையில் ஊழியத்திற்கான தேவையை அறிந்து அதற்கேற்ப ஊழியர்களை தயார்படுத்தும் பொறிமுறையினை ஏற்படுத்துவதன் மூலம் உலக தொழிலாளர் சந்தைக்கு ஏற்றவாறு ஊழியர்களை உயர்வருமானம் பெறும் தொழில்களுக்கு நிரம்பல் செய்யமுடியும்.

வீட்டுப் பணிப்பெண்களாக சென்றுள்ளவர்களது குடும்பங்களில் கணவனின் பொறுப்பற்றதன்மை, போதைப் பொருள் பாவனை, பாலியல்சார் துர்நடத்தைகள் மற்றும் பிள்ளைகளின் கல்வி பாதிப்பு, துஷ்பிரயோகம், பிறழ்வான நடத்தைகள் போன்ற நிலைகள் ஏற்படக்கூடும். இவ்வாறன இடங்களில் நன்நடத்தை உத்தியோகத்தர்கள்> முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்றோரின் கூடுதலான கண்காணிப்பு அவசியமாகும்.
சிறு குழந்தையுள்ள தாய்மார்கள் வெளிநாட்டிற்கு பணிப்பெண்களாக செல்வதற்காக பெற்றுக் கொள்கின்ற குடும்பப் பிண்ணனி அறிக்கையை (குடீசு)வழங்கும் போது உத்தியோகத்தர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் சரியாக மேற்கொள்வதன் மூலம் தாய்மார் தடுக்கப்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் உளநலப்பாதிப்பும் தடுக்கப்படும்.

சுற்றுலா வீசா/தரிசிப்பு வீசாக்கள் (Tourist visa / Visit visa) மூலமாக பெண்கள் வெளிநாடு செல்வது முற்றாக தடை செய்யப்படல் வேண்டும். இதன் மூலமாக விட்டுப் பணிப்பெண்கள் ஏமாற்றப்பட்டு பாலியல் தொழிலுக்காக விற்கப்படுவதையும்இ சிறிய குழந்தைகளை கொண்ட தாய்மார் சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதையும் தடுக்கலாம். தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு செல்பவர்களால் வழங்கப்படுகின்ற குடும்ப அபிவிருத்தித் திட்டத்தை (Family Development Plan) சரியான முறையில் நடைமுறைப்படுத்த தூண்டுதல் வேண்டும். இதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு அவசியம்.

## References

Annual Report, (2020) Colombo: Central Bank of Sri Lanka.

Annual Statistical Report - 2018, Foreign Employment, Sri Lanka Bureau of Foreign Employment.

Bala,R.M and prada,E.M (2014). Migration and Private Consumption in Europe: A Panal Data Analysis. *Procedia Economics and Finance*, *10*(1), 141 - 149.

Borici, A. and Gavoci, M. (2015). The Impact of Remittances on Households" Well Being: Evidence from Albania. *International Journal of Economics, Commerce and Management*, *3*(11), 80 - 103.

Castaldo and Reilly (2007). DO Migrant Remittances affect the Consumption patterns of Albeanian households? –*South Eastern Europ Journal of Ecconomics*, *1*, 25-54.

Cuong, N.V and Daniel, M. (2012).Economic Impact of International Migration and Remittences on Household Welfare in Vietnam. *Journal of Development lssues*, *11* (2), 144 -163.

Gibson, J. McKenzie, D. and Stillman,S.(2011).The Lmpacts Of International Migration On Remaining Household Members: Omnibus Results From a Migration Lottery Program. *The Review of Economics and Statistics*, *93*(4), 1297 - 1318.

International Labor Organization (ILO). 2021. *ILO Global Estimates on International Migrant Workers: Results and Methodology*. Geneva: ILO. Available online.

Khuseynova, G. (2013). Social Economic Impacts of Labor Migration on Migrants Households in Tajikistan: Working out policy Recommendations to Address its Negative Effects. *School of public policy Capstones, 26*, 1-32. http://Scholarworks.umass.edu capstones/26

Mazhar Yasin mughal and Farid Makhlouf, (2011) "Volatility of Remittances to Pakistan: What do the Data Tell?", *Economics Bulletin*, *31*,(1) 605-612.

Mohammed, K. and Tolossa, D.(2016). Contribution of Remittance to the Improvement of Rural Households Livelihoods: The Case of Tehuledere Woreda, Northeastern Ethiopia. *Journal of Development and Agriculture Economis*, *8*(10), 228 - 240.

Nzima. D., Duma, V. and Moyo, P. (2016). Migrant Remittances, Livelihood and Investment: Evidence from Tsholotsho District in the Matabeleand North Province of Zimbawe. *Migracijske i Ethnicke Teme*, *32*(1), 37 - 62

Resoures Profile, (2021) Divisional Secretarial Akkaraipattu.

Siriwadhana, C., Wickramage, K., Adikari, A., Weerawarna, S, Bortel T.V., Siribaddana,S and Sumathipala,A.(2015). Impact of Economic Labor Migration: A Qualitative Exploration of Left-Behind Family Member Perspectives in Sri Lanka. *Journal of Immigrant and Minority Health, 17*(13), 885 - 894.